விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 252 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை (27.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## வட மாகாண சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் ஐங்கரன் விபத்தில் மரணம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவரும் யாழ். பிரதேச செயலக சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளருமான பத்மநாதன் ஐங்கரன் (வயது-50) வீதி விபத்தில் மரணமடைந்துள்ளார்.

காரைநகரைச் சொந்த இடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐங்கரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் கல்வி நிலையத்துக்குச் சென்ற தனது மகனை 15

சுவிஸிலிருந்து தாயகம் திரும்பிய

## குடும்பஸ்தர் வவுனியாவில் அடித்துப் படுகொலை



(வவுனியா)

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட் 15

## நாய்க்கடிக்கிலக்கான பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வளர்ப்பு நாய் கடித்ததால் சிகிச்சை பலனின்றி மூதாட்டி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மகேந்திரன் சாந்தி என்ற 62 வயதானவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த மாதம் வளர்ப்பு நாய் கடித்து இரத்தம் வடிந்த நிலையில் உரிய சிகிச்சை 15

வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற

# படுகொலைகள் தொடர்பில் விசாரணை நடைபெறும்



### ஜே.வி.பி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

- வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து விசாரணை.
- காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை.
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நீக்கப்படும்.

வடகிழக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகள் காணாமல்போகச்செய்தல், ஆட்கடத்தல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டுவோம் என தேசிய மக்கள் சக்தி 15

இருபாலையில்

## கார் - சைக்கிள் விபத்து: ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டியில் வீதியைக் கடப்பதற்காக மத்திய கோட்டுப் பகுதிக்குச் சென்று நின்ற வேளை பின்னால் வந்த கார் வேகமாக மோதித் தள்ளியதில் படுகாயங்களுக்கு 15

நெருங்கும் ஜனாதிபதித் தேர்தல்

## இலங்கையில் நங்கூரமிடும் வல்லரசு நாடுகள்

(கொழும்பு)

இலங்கையின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சூழ்நிலையில் இலங்கை துறைமுகங்களுக்கு வல்லரசு நாடுகளின் கப்பல்களின் வரத்து அதிகரித்துள்ளது.

அதன் பிரகாரம் கடந்த வாரம் அமெரிக்கக் கடற்படைக்குச்சொந்த 15

## யானை தாக்கி ஒருவர் பலி

வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா போகஸ்வெவப் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 53 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதாக 15

ஐ.நா மனித உரிமைகள் ஆணைய

## அறிக்கையை அடியோடு மறுக்கிறது இலங்கை

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து முன்வைத்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் முற்றாக மறுத்துள்ளது. 16

அதிகமதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு
ஹந்தஹன
Handahana ராசி சுப பலன்
ரூ.மூன்று மில்லியன் சுப்பர் பரிசு வெற்றியாளர்


அடுத்த மில்லியன் வெற்றியாளர் நீங்களா?
தேசிய லொத்தர்
ஹந்தஹன 762 ஆவது சீட்டிழுப்பிலே ரூ.3,596,648.88ஐ வென்ற சுப்பர் பரிசு வெற்றியாளர்
(C-2387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
17
-
03
-
1950



உதிர்வு
26
-
08
-
2024

## செல்வி நடராஜா சந்திராதேவி (மாலா)

யாழ்.வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி நடராஜா சந்திராதேவி (மாலா) அவர்கள் 26.08.2024 திங்கட்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஏகாம்பரம் - செல்லமுத்து தம்பதிகளின் தத்துப்பிள்ளையும் காலஞ் சென்றவர்களான தியாகராஜா, சாம்பசிவம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மோகன் மற்றும் ரவீந்திரன், சகுந்தலாயினி, மீனலோஜினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.08.2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :* தியாகராஜா ரவீந்திரன்
38,(14) இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

076 102 5249
077 222 8992

(C-1059)


# பதவி வெற்றிடம்

- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அணிமித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.


# இதய அஞ்சலி



எமது பல்கலைக்கழக முகாமைத்துவப் பிரிவு
நண்பனும் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலய
ஆசிரியருமான **வேலு யோகப்பிரகாஷ்**
அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்
## திருமதி வேலு சீதை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
**யாழ்.பல்கலைக்கழக 95/96**
**நண்பர்கள்**

(C-1057)

# மரண அறிவித்தல்



மலர்வு
23.08.1933

உதிர்வு
24.08.2024

## முருகேசு பராசக்தி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பராசக்தி அவர்கள் கடந்த 24.08.2024 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இல. 94, சிவநகர், உருத்திரபுரம் கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் 27.08.2024(செவ்வாய்க்கிழமை) பார்வைக்காக வைக்கப்பட்டு மறுநாள் 28.08.2024 (புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் இறுதிக் கிரியைக்காக பூதவுடல் உருத்திரபுரம் பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.94, சிவநகர்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

*தகவல் :*
குடும்பத்தினர்
077 868 6963(பிரபா)

(290)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தொடர்பில் 1052 முறைப்பாடுகள்

(கொழும்பு) ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி வரை) 1,052 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 472 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 534 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 42 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (நி-6)

விரைவில்
மக்கள் கையில்
சக்தியை
கொடுப்போம்.

பின்னர்
அவர்கள்
நாட்டின்
எதிர்காலத்தை
நிர்ணயிப்பார்கள்.

நாளைய
சக்தி
உங்கள்
கையில்

(சி-2386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஆழியவளை சி.சி.த.வித்தி. மாணவன் அகரன் சாதனை

வட மாகாணத்தில் பாட சாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி கடந்த ஒரு வாரமாக யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றிருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை நிறைவுற்று இருந்தது.

நடந்து முடிந்த போட்டியில் யா/ ஆழியவளை சி.சி.த. வித்தியாலய மாணவன் செல்வன் கே. அகரன் நீளம் பாய்தல் மற்றும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் மாகாண மட்ட சாதனையை முறியடித்து புதிய சாதனையை படைத்துள்ளார்.

100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2 ஆம் இடமும், 14 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-6)




# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்த தவான்

இந்திய கிரிக்கெட் அணியின் இடது கை பட்ஸ்மேனாக திகழ்ந்தவர் ஷிகர் தவான். இவர் உள்நாட்டு மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்திய அணிக்காக 34 டெஸ்ட், 167 ஒருநாள் மற்றும் 68 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

50 ஓவர் போட்டிகளில் 6,793 ரன்கள் குவித்துள்ளார். சராசரி 44.11 ஆகும். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 2315 ரன்கள் அடித்துள்ளார். சராசரி 40.61 ஆகும்.

38 வயதாகும் ஷிகர் தவான் 2010 ஆம் ஆண்டு இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியில் அறிமுகம் ஆனார். கடைசியாக 2022 ஒருநாள் போட்டியில் வங்க தேசத்திற்கு எதிராக விளையாடினார்.

அதன் பின் இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்காமல் இருந்தார். டெஸ்ட் போட்டியில் 2018 ஆம் ஆண்டுக்குப்பின் விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை. 2021 இற்குப் பிறகு ரி- 20 கிரிக்கெட்டில் விளையாட வாய்ப்பு கிடைக்க வில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் 7 சதங்களும் ஒருநாள் போட்டியில் 17 சதங்களும் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-6)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3206

**புவியா**

மனைவி- ஏங்க கோழிக்குழம்பை வாசம் இல்லாமல் வைக்கச் சொல்றீங்க...
கணவன்- அடியே பக்கத்து வீட்டுக்காரன் கோழிய தேடிட்டு இருக்கான்டி...




**மாதுரி**

அண்ணே நீங்க தான் நல்லா இங்கிலீஷ் பேசுவீங்களே எனக்கும் சொல்லி கொடுங்க அண்ணே...
நானே Push க்கும் Pullக்கும் மீனிங் தெரியாம டோர்ல முட்டிப்பன் என்கிட்ட போய் கேக்கியேப்பா....



**கஸ்தூரி**

எப்ப பாரு வீட்ல அரிசி இல்ல..சர்க்கரை இல்ல...கேஸ் இல்ல ன்னு சொல்லிகிட்டு...
இனிமே இருக்கு ன்னு சொல்லிப் பழகு...
சரிங்க... அரிசி டப்பா காலியா இருக்கு...
கேஸ் சிலிண்டர் காலியா இருக்கு...
சர்க்கரை டப்பாவும் காலியா இருக்கு...



**யுவதேஷ்**

முகநூலில் தன்னை "டி" போட்டு பேசிய நபரை நைஸாக வரவழைத்து விசம் கலந்த "டீ" போட்டு கொடுத்து கொலை செய்த பெண் கைது.."
மாப்ள... இனிமேல் "டீ" இல்ல
"டி"கூட
யார்க்கிட்டயும்
கேட்றாத...




**கர்த்திக்**

செல்லம் நைட்டுக்கு என்ன சாப்பாடு...
தக்காளி சோறுங்க...
அடியே தக்காளி விலை 100 ருபாய்
நானே அரைக்கிலோ தான் வாங்கினேன்
அவ்ளோத்தையும்
ஒரே நாளில காலி
பண்ணிட்டியா....
இல்லைங்க
ஒரு தக்காளி
தான் போட்டேன்.
எதே ஒரு தக்காளில
தக்காளிசோறா...



**யது**

நமக்கு கஷ்டம் வரும் வரை தெரிவதில்லை...



உதவுவது யார்...
ஒதுங்குவது யார், யார் என்று...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ் தானத்தின் இணை அனுசர ணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க் கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணிவரை ஊரெழுகலாலய நுண்கலைப் பயிலகம் வழங்கும் நிகழ்வில் வயலின்- டிகுகுமார் சாகித்தி யன்,கபிலன், ஆருரன், மிரு தங்கம்- ர.லயசர்மா, கஞ்சிரா- க. ஆதித்தியன், கடம்- உ.கிது சன், முகர்சிங்- கௌ. அரோ சன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். அதனைத்தொடர்ந்து 7.15-8.05 மணி வரை இடம் பெறவுள்ள இசையரங்கில் பாட்டு-பத்மநாதன் சிவமைந்தன், வயலின்-இ.நிரோஜன், மிருதங் கம்-வ.ரமண சர்மா, கஞ்சிரா- ர.லயசர்மா, முகர்சிங்- கௌ. அரோகன் மற்றும் தம்புரா- தி.லவணி யன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# பெண் ஒருவர் எரிகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பகுதியில் குடும்ப பிரச்சினை காரணமாக பெண் ஒருவர் தீயிட்டு எரியூட்டப்பட்டு, எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கணவன் மது போதையில் வீட்டுக்கு வந்த நிலையில் மனைவியுடன் தகராறில் ஈடு பட்ட பின்னர் அவரை அறை ஒன்றுக்குள் பூட்டி வைத்து தீயினை மூட்டியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயான பால கிருஷ்ணன் நிருத்திகா என்ற 28 வயதான பெண் எரிகாயங்களுக்கு உள்ளானார்.


காயமடைந்த பெண் அச்சு வேலி பிரதேச வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டது. கணவன் தப்பிச் சென் றுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (நி-6-33)

## 'வளமான நாடு'- அழகான வாழ்க்கை

# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

(கொழும்பு)

"வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் தொனிப் பொருளில் தேசிய மக்கள் சக்தி யின் தேர்தல் விஞ்ஞாபனம் கட்சியின் தலைவரும் ஜனா திபதி வேட்பாளருமான அநு ரகுமார திசாநாயக்கவினால் நேற்று கொழும்பில் வெளி யிட்டு வைக்கப்பட்டது.



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசா நாயக்க தேர்தல் விஞ்ஞாப னத்தை மதத்தலைவர்க ளுக்கு வழங்கினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக மாற்று முறைமையை செயற்படுத்தும் திட்டங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும் சார்பான வகையில் புதிய அரசி யலமைப்பு உருவாக்கப்படும் என்றும் தேர்தல் விஞ்ஞாப னத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. (நி-6)




# கதிர் வேலவனே சரணம்!

வேண்டும் வரமருளும்
வேற் பெருமானே!
வேதனை போக்கும்
வெள்ளி மயிலோனே!
மண்ணில் நல்வாழ்வு
மனமகிழ்ந்த தருள்பவனே!
மனக்குறை போக்கும்
மாயோன் மருகனே!
கண்ணில் ஒளியாகிய
கதிர் வேலவனே!
கானமயில் தனிலேறி
களிப்புடன் உலகாள்பவனே!
விண்ணவரும் போற்றும்
வீரவேல் பெருமாளே!
வழியெல்லாம் துணைவந்து
வழிகாட்டுவோனே சரணம்!

விஜயகண்ணன்

# நல்லைக் கந்தவேளே!

சூரனின் கொடுமையால் சொல்லொணாத் துயருற்ற
தேவரைக் காக்கவென்றே
வீரனாய் வந்தங்கு வேலெடுத் தாடியே
வெற்பினைப் பிளந்துதள்ளி
தீரம் மிகுந்திட்ட சூர்குலம் யாவையும்
தீரவே வேரறுத்து
ஆரமாய் வெற்றியை நாட்டியே கூட்டினாய்
அருநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

27.08.2024
ஆவணி 11, செவ்வாய்க்கிழமை
அட்டமி முற்பகல் 7.32 மணிவரை

ரோகிணி முன்னிரவு 8.59 மணிவரை
சுபநேரம் 10.35-12.55 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

அட்டமி, நவமி
ஸ்ரீ கிருஷ்ணா ஜெயந்தி
சந்திராஷ்டமம் - அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, வருமானம் பெருகி வளம் காணும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** வரவும் செலவும் சம மாகும் நாள், புதிய பொறு ப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாக லாம், உடல்நலனில் கவனம் தேவை.

**மகரம்** செய்தொழில் மேன்மை யுண்டு, உதிரிவருமா னங்கள் வந்து சேர லாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**ரிஷபம்** எந்தவொரு வேலையை யும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு

**சிம்மம்** தொட்ட காரியங்கள் துளிர்விடும் நாள், செய்தொழில் மேன்மை யுண்டு, பிறர் உதவி யுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** வெளியூர்த் தொடர்பு கள் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமை யும், நண்பர்கள் வழியில் ஒத்து ழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** தொழில் ரீதியான பய ணங்கள் இடம்பெற லாம், வழிபாட்டால் திருப்தி காண வேண் டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர் கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத் துடையோர் மனம் மாறு வர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக் கும் வாய்ப்புண்டு, இனி மையான அனுபவங் கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தம் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** பணப்புளக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விர யங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப த்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

நண்பர்களைப் பற்றி நல்லதே பேசு, விரோதியைப் பற்றி எதுவும் பேசாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**

**பேராசிரியர். சு.வித்தியானந்தன்**
**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்**
**முதலாவது துணைவேந்தர்)**
**நூற்றாண்டு நினைவு தின நிகழ்வுகளும்**
**நினைவுப்பேருரையும்-2024**

➢ **ஆவணப்படக்காட்சி**
"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வித்தியானந்தன் நூலக முகிழ்ப்பின் வரலாறு"

➢ **நினைவுப்பேருரை நிகழ்வு**
பேருரைத் தலைப்பு :
"தென்னிந்தியா-யாழ்ப்பாணம்:
கல்வி, கலாசார ஊடாட்டம்"

பேருரை வழங்குனர் :
பேராயர்.கலாநிதி. S.ஜெபநேசன்
(மேனாள் அங்கத்தவர் பல்கலைக்கழகப் பேரவை)

➢ **இசை நாடகம்**
"சத்தியவான் சாவித்திரி"

திகதி : 29.08.2024 (வியாழக்கிழமை)
பி.ப 1.30 மணி

நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்.**

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C-1052)


# வடக்கு-கிழக்கு தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினமான எதிர்வரும் 30ஆம் திகதி யாழில் மாபெரும் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர்.**

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே குறித்த போராட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையில், யுத்தம் நிறைவுக்கு வந்த நாட்கள் தொடக்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி போராடி வருகிறோம். இது வரையில் எமக்கான நீதி கிடைக்கப் பெறவில்லை.

உள்ளக விசாரணைகளின் ஊடாக நீதி கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை. எனவே தான் நாம் சர்வதேச விசாரணைகளை கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர்.

அதேவேளை குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர், அகில இலங்கை தொழிலார் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் மற்றும் அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் ஆகியோரும் குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு தமது அமைப்புக்கள் சார்ந்த ஆதரவை தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கில் யாழிலும் கிழக்கில் திருகோணமலையிலும் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு அரசியல் கட்சிகள் , சிவில் அமைப்புக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் குறித்த போராட்டத்திற்கு வலு சேர்க்க தமது ஆதரவுகளை வழங்கி போராட்டத்தில் கலந்து கொண்டு எமது குரலை சர்வதேசத்திற்கு கேட்குமாறு கூற வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(நி-6-33)



**நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பதினேழாவது நாளாகிய நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை அருணகிரிநாதர் உற்சவம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.**
**(படம் - சிவசாந்தன்)**

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திரிசாரணர் குழாம் ஒழுங்கமைக்கும் இரத்தான முகாம் இன்று மு.ப 9-பி.ப 2 மணி வரை நல்லூர் மயிலூரான் மண்டபத்தில் இடம் பெறும்.

இலங்கை சாரணர் சங்க மாவட்ட சாரணர் ஆணையாளர் ம.பிரதீபன், யாழ். மாநகர சபை ஆணையாளர் த. கிருஸ்ணேந்திரன், மாவட்ட சாரணர் கிளை முன்னாள் உதவி ஆணையாளர் இ. ராஜ்குமார் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**

பேராசிரியர்.
கா.கைலாசநாதக்குருக்கள்
நினைவுப்பேருரை - 2024

பேருரைத் தலைப்பு :
**"சமஸ்கிருத - தமிழ் நீதி**
**இலக்கியங்களில் வாழ்வியல்**
**விழுமியங்கள்"**


பேருரை வழங்குனர் :
**திருமதி. சி. ஜெகநாதன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமஸ்கிருதத் துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திகதி : 28.08.2024**
**(புதன்கிழமை)**
**பி.ப 3.00 மணி**

**நிகழ்விடம் :**
கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்**

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (c-1054)

சாள்ஸ் பொரோமியோ நற்பணி மன்றத்தினர் அமரர் திருமதி ஆன்றோஸ் ராஜ்குமார் ஞாபகார்த்த படிப்பகத்தின் அனுசரணையில் தரம் ஐந்து மாணவர்களுக்கான இலவச புலமைப் பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு கடந்த சனிக்கிழமை புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கருத்தமர்வினை வித்தியாலயத்தின் முன்னாள் ஓய்வு நிலை அதிபர் திருமதி. பி.எப்.சின்னத்துரை ஆரம்பித்து வைத்தார். கருத்தமர்வின் வளவாளராக மன்னார் கார்மேல் நகர் றோ.க. வித்தியாலயத்தின் அதிபர் சி. இரட்ணஜோதி கலந்து கொண்டார். இக் கருத்தமர்வில் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் லென்றோக்ஸ் வித்தியாலயத்தின் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க விவாதத்துக்கு அழைக்கும் விமல் வீரவன்ச

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் ஆயுட்காலம் செப்ரெம்பர் 21 ஆம் திகதியுடன் நிறைவடையும். தேசியத்தை கருத்திற் கொள்பவர்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வஜன சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு எதிராக செயற்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சியாக செயற்பட்டோம்.

எமக்கும் சுயநல நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட முடியும். ஆனால் ஒருபோதும் நாங்கள் அவ்வாறு செயற்படவில்லை.

2019 ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணையை பலவீனப்படுத்தக் கூடாது என்பதற்காகவே 7 அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து சர்வஜன சக்தி என்ற புதிய அரசியல் பரிணாமத்தை தோற்றுவித்துள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் ஆயுட்காலம் எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதியுடன் நிறைவடையும், அவருக்கு ஆதரவு வழங்க சென்றுள்ளவர்களின் அரசியல் எதிர்காலமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பிரதான வேட்பாளர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எவரும் தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுவதாக குறிப்பிடவில்லை.

தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் அனைத்து தரப்பினரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும். பொருளாதார கொள்கை தொடர்பில் பிரதான வேட்பாளர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களிடம் பகிரங்க விவாதத்துக்கு நாங்கள் தயார் எனத் தெரிவித்தார். (நி-6)

# ஜனாதிபதி வேட்பாளர்கள் விமானங்களை பயன்படுத்தத் தடை

## தேர்தல் ஆணைக்குழுவின் அதிரடி உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வேட்பாளர்களுக்கு அரச செலவில் விமானப்படை உலங்குவானூர்திகள் அல்லது விமானங்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்காக அதனை பயன்படுத்த முடியாதென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவிக்கையில்,

அரச விமானங்களை தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தினால் அதற்கு பணம் கொடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும் ஏனைய தேர்தல் அல்லாத உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு விமானங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நபர்கள் அரசாங்க விமானங்களைப் பயன்படுத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரச பேருந்துகள் மற்றும் தொடருந்துகளை தேர்தல் பணிகளுக்காக பயன்படுத்தினால் அதற்கும் பணம் செலுத்தி பற்றுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அரசாங்க சொத்துக்களை தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்துதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி-6)

# தமிழர்களின் மொழி உரிமை உறுதிப்படுத்தப்படும்

## தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் அநுர

**(கொழும்பு)**

**தமிழர்களின் மொழி உரிமையை அரச நிர்வாகத்தின் ஊடாக உறுதிப்படுத்துவதுடன் அரச நிர்வாகத்தில் தமிழர் ஒருவர் தமிழ் மொழியில் கேள்வி எழுப்பும் போது அவருக்கு தமிழ் மொழியில் பதிலளிப்பதை கட்டாயமாக்குவோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



நேற்று திங்கட்கிழமை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தேர்தல் விஞ்ஞாபனத்தை மத தலைவர்களுக்கு வழங்கிய பின்னர் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக மாற்று முறைமையை செயற்படுத்தும் திட்டங்கள் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும் சார்பான வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவு பொருட்களை இறக்குமதி செய்து உண்ணும் நிலைமை மாற்றம் பெற வேண்டும். தேசிய உணவு உற்பத்தி மேம்பாட்டு திட்டத்தை கட்டம் கட்டமாக செயற்படுத்துவோம்.

பொருளாதார முன்னேற்றத்தின் பிரதிபலனை நியாயமான முறையில் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்போம். நடுத்தர மக்களை ஏழ்மையில் வைத்துக்கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது.

பாடசாலை கல்வி கட்டமைப்பை மறுசீரமைப்போம். உணவு, கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கான வற் வரியை நீக்குவோம். நீர் மற்றும் மின்சார கட்டணத்தையும் குறைப்போம் என அநுரகுமார திஸாநாக்க மேலும் தெரிவித்தார். (நி-6)

# மாற்றத்தை ஏற்படுத்தும் தலைவரை தேர்ந்தெடுங்கள்

## கத்தோலிக்க ஆயர் பேரவை

(கொழும்பு)

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் அமைப்பு முறை மாற்றத்தை கொண்டுவரக்கூடிய, ஊழலை ஒழிக்கக்கூடிய, புதிய கலாசாரத்தை அறிமுகப்படுத்தக்கூடிய புத்திசாலித்தனமான, துணிச்சலான தலைவரை பொதுமக்கள் தெரிவு செய்யவேண்டும் என கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்களின் நலன் மற்றும் நாட்டின் வளர்ச்சியை பணயம் வைத்து தங்களின் சுயநலன்களிற்காகவும் தங்களின் நிகழ்ச்சி நிரலிற்காகவும் அதிகாரம் மற்றும் பதவிகளிற்காகவும் மக்களை தூண்டும், அரசியல் கலாசாரத்தை மாற்றவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படவேண்டும் என கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் ஊழலையும் அதன் தீமைகளையும் இல்லாதொழிப்பதற்கு தேசத்திற்கு புத்திசாலித்தனமான துணிச்சலான தலைவர் தேவை என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது. (நி-6)


கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி.யோ.பாலசுப்ரமணியம் மற்றும் செல்வி.இ.ஜெயராணி அவர்களின் அன்புச் சகோதரி

திருமதி. பிரதாபன் குணேஸ்வரி

அவர்கள் 21.08.2024 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



தோற்றம் : 16.09.1958
மறைவு : 21.08.2024

(1790)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில்.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் சித்திர பாட ஆசிரியராக கடமையாற்றும் திருமதி. கு.தயாமதி அவர்களின் அன்பு மாமியார்

திருமதி. யோகேஸ்வரி இராசரத்தினம்
(ஓய்வு நிலை ஆசிரியர்)

அவர்கள் 25.08.2024 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



தோற்றம் – 20.09.1939
மறைவு – 25.08.2024

ஆசிரியர் நலன்புரிக்கழகம், (1790)
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வயது முக்கியமில்லை...

# 102 வயதில் ஸ்கை டைவிங் செய்து அசத்திய மூதாட்டி

(லண்டன்)

102 வயதான பிரிட்டன் பெண்மணி மெனட்டே பெய்லி தனது பிறந்தநாளில், 2100 மீற்றர் உயரத்தில் வானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் இருந்து ஸ்கை டைவிங் செய்து அசத்தியுள்ளார்.

இவர் இளம் வயதினர் போல சாகசம் செய்து அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

தனது பிறந்தநாளில் ஏதாவது சாகசம் செய்து அசத்தி காட்டிவிட வேண்டும் என பெயலிக்கு தோன்றியுள்ளது.



பிறந்தநாளில் அவர் 2,100 மீற்றர் உயரத்தில் வானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் இருந்து ஸ்கை டைவிங் செய்து அசத்தினார். 7 ஆயிரம் அடி உயரத்தில் விமானத்தில் இருந்து குதித்து பிரிட்டனின் மிக வயதான ஸ்கை டைவர் ஆனார். 3 தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டுவதற்கு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

வயதானாலும் முயற்சி செய்தால், எதையும் சாதித்து காட்டலாம் என நிரூபித்து காட்டிய 102 வயது மூதாட்டி கூறியதாவது, ஸ்கை டைவிங் செய்யும் போது கண்களை இறுக மூடிக்கொண்டேன். நான் மிகவும் வேகமாக பயணிப்பது போல் தோன்றியது. எனது செயல் வயதானவர்களை சுறுசுறுப்பாக செயற்பட வைக்கும் என நம்புகிறேன்.

நான் சுறுசுறுப்பாக செயற்படுவதற்கு காரணம் என்ன என்றும் முதுமையின் இரகசியம் என்ன என்று மக்கள் அடிக்கடி கேட்கின்றனர். நிச்சயமாக இது அதிர்ஷ்டம். நான் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சுறுசுறுப்பாக இருக்கிறேன் எனத் தெரிவித்தார். (நி-6)

## ரஷ்யாவில் 38 மாடி கட்டடம் மீது

# ட்ரோன் தாக்குதல்


### அதிர்ச்சி தந்த உக்ரைன் இராணுவம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் சரடோவ் நகரில் உள்ள 38 மாடிகள் கொண்ட கட்டடம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியதில் பெண் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். கடந்த சில தினங்களாக ரஷ்ய இராணுவ படைகளுக்கு, உக்ரைன் அடுத்தடுத்து அதிர்ச்சி கொடுத்து வருகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. நவீன இராணுவ தளபாடங்களோ, நிதி வசதியோ இல்லாத உக்ரைன் இராணுவத்தை போர் தொடங்கிய சில நாட்களிலேயே பின்னுக்குத் தள்ளி ரஷ்யா முன்னேறியது. உக்ரைன் நாட்டின் சில மாநிலங்களை ரஷ்யப் படைகள் ஆக்கிரமித்துள்ளன. இத்தகைய சூழ் நிலையில் தான், தற்போது உக்ரைன் இராணுவம் ரஷ்யாவுக்கு அதிர்ச்சி கொடுத்து கொண்டே வருகிறது.

சமீபத்தில், ரஷ்யாவின் குர்ஸ்க் மாநிலத்தில் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது உக்ரைன் இராணுவம். ரஷ்ய மக்களின் 74 குடியேற்ற பகுதிகளை உக்ரைன் கைப்பற்றியுள்ளது என அந்நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் உறுதி செய்தார். இந்நிலையில் நேற்று ரஷ்யாவின் சரடோவ் நகரில் உள்ள 38 மாடிகள் கொண்ட கட்டடம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

அதிவேகத்தில் வந்த ட்ரோன் அடுக்குமாடி கட்டடம் மீது மோதி வெடித்து சிதறியது. அந்த கட்டடங்களில் இருந்து புழுதிகள் கிளம்பியதை கண்டு பகுதி மக்கள் பீதி அடைந்தனர்.



பெண் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். மீட்பு பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது. 38 மாடி கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகும் வீடியோ காட்சிகள் சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதல் போல் ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளதாக இணையத்தில் விமர்சனங்கள் பரவி வருகின்றன. (நி-6)

## பனிப்பாறை இடிந்து விழுந்து ஐஸ்லாந்தில் ஒருவர் பலி



(ஐஸ்லாந்து)

தென்கிழக்கு ஐஸ்லாந்தில் பனிப்பாறை சரிந்து வீழ்ந்ததில் சுற்றுலா சென்றவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காணாமல் போயுள்ள நிலையில் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

தென்கிழக்கு ஐஸ்லாந்திலுள்ள ப்ரீடாமெர்குர் ஜோகுல் பனிப்பாறை பகுதிக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுற்றுலா வழிகாட்டியுடன் 25 பேர் கொண்ட குழுவினர் சென்றுள்ளனர்.

ஐரோப்பாவின் மிகப் பெரிய தேசிய பூங்காக்களில் ஒன்றான சுமார் 5,460 சதுர மைல் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள வட்னா ஜோகுல் தேசிய பூங்காவின் ஒரு பகுதியாக இந்த பனிப்பாறை உள்ளது.

அவர்கள் பனிப்பாறையில் உள்ள பனி குகைகள் மற்றும் பள்ளத்தாக்குகளை ஆராய்ந்து கொண்டிருந்த போது பனிப்பாறை சரிந்து வீழ்ந்துள்ளது.

பனிப்பாறை சரிந்து வீழ்ந்ததில் 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் இருவர் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதோடு, மற்றுமொருவர் ஐஸ்லாந்தின் தேசிய பல்கலைக்கழக வைத்தியசாலையான லேண்ட்ஸ் பிடலினுக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்டுள்ளார். காணாமல் போனவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது. (நி-6)

# எதிர்பார்

# மீண்

# ஹிஸ்ப

(ஜெருசலேம்) -

இஸ்ரேல் மீது ந

தல் எதிர்பார்த்

ளிக்கவில்லை எ

தாக்குதலை மேற்


அமைப்பின் தலை

தாக்குதலினால் ஏற்பட்டுள்ள சேதங்கள், பாதிப்புகள் குறித்து மதிப்பீடுகளை மேற்கொள்வோம். எதிர்பார்த்த சேதங்கள், பாதிப்புகள் ஏற்படவில்லை என்றால் மீண்டுமொரு முறை தாக்குதலை மேற்கொள்வோம் என ஹசன் நசரல்லா தெரிவித்துள்ளார்.

## இந்தோனேஷியா

# 13 பேர் உ

## 14 பேர்



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் ருவா கிராமத்தில் பெய்து வரும் கன மழையில் சிக்கி 13 பேர் உயிரிழந்ததுடன் பலர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ருவா கிராமத்தில் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக குடியிருப்புகள் வெள்ளத்தில் சேதமடைந்ததுடன் பிரதான சாலைகள் மற்றும் அந்த கிராமத்திற்கான தரைவழி தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, பல வீடுகள் மற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ...ர்த்தளவு வெற்றியளிக்காவிட்டால்

# ...டும் தாக்குவோம்!

## ...புல்லா அமைப்பு எச்சரிக்கை

(...ம்)

**...து நாங்கள் மேற்கொண்ட தாக்கு ...ார்த்த அளவிற்கு வெற்றிய ...ல என்றால் மீண்டுமொரு முறை ...மேற்கொள்வோம் என ஹிஸ்புல்லா ...தலைவர் தெரிவித்தார்.**



எங்கள் அமைப்பின் இராணுவ நடவடிக்கை திட்டமிட்டபடி துல்லியமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், இஸ்ரேலிற்குள் 110 கிலோமீற்றர் உள்ளே உள்ள இஸ்ரேலின் புலனாய்வுப் பிரிவினரின் உட்கட்டமைப்புகளை இலக்குவைத்தோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் அயர்ன் டொமை நோக்கி கெட்டுசா ரொக்கட்களை செலுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் சிரேஸ்ட தளபதியை இஸ்ரேல் கொலை செய்தமைக்கு பழிவாங்குவதற்காக பொது மக்கள் வாழும் பகுதிகளை இலக்குவைக்க நாங்கள் விரும்பவில்லை. என தெரிவித்துள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் இஸ்ரேலின் உட்கட்டமைப்பை இலக்குவைக்க விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ...ியாவில் வெள்ளம் ...உயிரிழப்பு ...ர் மாயம்



...றும் கட்டடங்கள் சேற்றில் புதைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கனமழையில் சிக்கி 13 பேர் உயிரிழந்ததுடன், காணாமல் போயுள்ளோர்களை தேடும் பணியில் மீட்புக்குழு ஈடுபட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவின் லியோனிங் மாகாணத்தில் உள்ள ஹூலுடாங் நகரில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் கனமழையில் சிக்கி 11 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 14 பேர் காணாமல் போயுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பாரிய தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்!

(ஜெருசலேம்)

காசாவின் டெயர் எல் பலாஹ் பிராந்தியத்திலிருந்து மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவுறுத்தி வருகிறது.

இந்தப் பகுதியில் இஸ்ரேல் பாரிய தாக்குதல்களை நடத்துவதற்குத் தயாராவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து மத்திய காசாவில் இயங்கிய கடைசி வைத்திய நிலையமான அல் அக்சா மருத்துவமனையில் தங்கி இருந்த நோயாளர்களும் இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்களும் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். மேலும் அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)



## பாகிஸ்தானில் விபத்துக்கள் 37 பேர் வரையில் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இரு வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானில் இருந்து சுமார் 70 பக்தர்களை ஏற்றிக் கொண்டு நேற்று பஞ்சாப் நோக்கி பயணித்த குறித்த பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.


இந்நிலையில் குறித்த விபத்தில் 11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை காஷ்மீர் ஆக்கிரமிப்பில் பாகிஸ்தான் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்றும் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது குழந்தைகள், பெண்கள் உட்பட 26 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேருந்துகளுக்கு நடுவே சிக்கிய ஆட்டோ



(யாழ்ப்பாணம்)

யாழில் இரண்டு பேருந்து களுக்கு இடையே முச்சக்கர வண்டி சிக்கி விபத்து இடம் பெற்றது.

ஆரியகுளம் - தொடருந்து தண்ட வாளம் பகுதியில் நேற்று காலை 10.10 மணியளவில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது வயவிளானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பேருந்து, தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் பேருந்து மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்டவை ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளை குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு பேருந்துக ளுக்குமிடையில் முச்சக்கர வண்டி சிக்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-6)

# களைகட்டும் தேர்தல்களம்; அதிகரிக்கும் பட்டாசு உற்பத்தி

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஜனாதிபதி தேர்தல் திருவிழா சூடுபிடித்து வரும் நிலையில் மறுபுறம், நாட்டில் பட்டாசு உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு பிரசார நிகழ்வுகள், வரவேற்பு நிகழ்வுகளுக்கு பட் டாசுகள் பயன்படுத்தப்படுவதனால் பட்டாசு உற்பத்தி அதிகரித்துள்ளது.

நாட்டில் கம்பஹா, காலி, கண்டி மற்றும் குருணாகல் மாவட்டங்க ளிலும் பட்டாசு உற்பத்தி மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 250 | 200-250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 190 | 190 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 200 | 150-200 |
| தக்காளி | 250 | 300 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 280 | 190 | 150-200 |
| கோவா | 300 | 300 | 350 | 300 |
| கரட் | 350 | 350 | 180 | 350 |
| பூசணி | 100 | 160 | 100 | 80 |
| புடோல் | 70 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 300 | 250 | 250 | 200-250 |
| சின்ன வெங்காயம் | 280 | 240 | 300-350 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 220 |
| பாகற்காய் | 300 | 350 | 350 | 300 |
| வெண்டக்காய் | 80 | 100 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 150 |
| பயற்றங்காய் | 200 | 160 | 150 | 100-130 |
| லீக்ஸ் | 320 | 350 | 320 | 350 |
| பீற்றூட் | 100 | 200 | 300 | 200 |
| கறிமிளகாய் | 400 | 650 | 600 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 160 | 250 | 120-160 |
| போஞ்சி | 400 | 500 | 550 | 400 |
| கத்தரி தம்புள்ள | 200 | 160 | 250 | - |
| கீரை - 1 பிடி | 130 | 120 | 50 | 50 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 | 300-350 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 80 | 80-120 |
| இராசவள்ளி | -- | 950 | 700 | 600 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 250 | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 70 |

# இன்று ஒரு தகவல் 221



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தைகள்

ஒரு தகப்பனார் தன்னுடைய பிள்ளையைப் பார்த்து இதோ பார், நீ எப்பவும் உன்னை விட புத்திசாலியான பிள்ளைகளிடம் நட்பு வைத்துக் கொள்ள வேண்டும். அது தான் நல்லது என்றார்.

உடனே அந்தப் பையன் நீ சொல்வது சரி தான் அப்பா. ஆனால் என்னை விட மோசமான பிள்ளைகளுக்கு ஒரு புத்திசாலிப் பிள்ளை தேவை இல்லையா? அது தான் அந்தப் பையனாக நான் இருக்கிறேன் என்றான்.

எதற்கு சொல்கிறேன் என்று சொன்னால், இந்தக் காலத்து பிள்ளைகளிடம் வாயைக் கொடுத்து விட்டால் அவர்களிடம் இருந்து மீள்வது கஷ்டம்.

சின்னப் பிள்ளைகளிடம் இருக்கிற புத்திசாலித்தனத்தை பெற்றவர்கள் தூண்டி விட வேண்டும். அதை அவர்கள் அமுக்கக்கூடாது.

இளேடிஸ் கார்ட்னர் என்று ஒரு குழந்தை உளவியல் நிபுணர் அமெரிக் காவிலே இருந்தார். அவர் என்ன சொல்கின்றார் என்றால். குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவிற்கு அனுமதிப்பது தான் நல்லது என்கிறார். உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள் முளைத்து மூன்று இலை கூட விடவில்லை அதுக்குள்ள இவ்வளவு திமிரா என்று கேட்கக்கூடாது.

சின்ன வயதில் பெரியவர்களை எதிர்த்துப் பேசி விட்டால் பின்னால் அந்த பிள்ளை கெட்டுவிடும் என்று நினைப்பது தப்பு.

அப்பாவிற்கு தெரியாத ஒரு கணக்கை பிள்ளை சரியாகப் போட்டு விடுகிறான். உடனே அந்த அப்பா அது தனக்கு அவமானம் என்று நினைத்து கொள்ளக்கூடாது. அதை விட பெரிய அவமானம் எல்லாம் தாங்கிக் கொள்ப வருக்கு குழந்தை செய்தது தான் அவமானமாகப் போய்விட்டதா?

நமது பிள்ளை நம்மை விட புத்திசாலியாக இருக்கிறானே என்று பெருமைப் பட்டுக் கொள்ள வேண்டும்.

உங்களது பிள்ளை உங்களிடம் ஏதாவது சொல்ல விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்க வேண்டும்.

அவன் தான் செய்த ஒரு காரியத்திற்கு அல்லது செய்யப்போகிற காரியத் திற்கு என்ன காரணம் சொல்கிறான் என்பதைப் பரிவோடு கேட்க வேண்டும்.

சின்னப்பிள்ளை ஏதோ விளையாட்டுத்தனமாகப் பேசுகிறது என்று நினைத் துக் கொண்டு வேறு எங்கேயும் கவனம் செலுத்தக் கூடாது.

ஒரு சிறுவன் தெருவிலே விளையாடிக் கொண்டு இருக்கிறான். அவனுடைய அம்மா கூப்பிடுகின்றார். டேய் இங்கே வா, கடைக்குப் போய் காப்பித்தூள் வாங்கிக் கொண்டு வா என்று சொல்கிறார். அந்தப் பையன் விளையாட்டிலே ஏதோ ஒரு முக்கியமான கட்டத்திலே இருக்கிறான் போல, கொஞ்சம் இரும்மா... கொஞ்ச நேரம் கழித்துப் போய்விட்டு வருகிறேன் என்கிறான். இந்தச் சமயத்தில் அந்த அம்மா விட்டுக்கொடுக்க வேண்டும். கோபப்படக் கூடாது. டேய் இப்போது கடைக்குப் போய் தான் ஆகவேண்டும். வாறியா இல்லையா என்று வற்புறுத்த ஆரம்பித்து விட்டால் அந்த பிள்ளைக்கு ஏமாற்றம், வெறுப்பு, கோபம் எல்லாம் வந்து விடும். இது நல்லதில்லை.

அதனாலே குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையைக் கொடுப்பது அவசியம் என்று சொல்கின்றார்கள் குழந்தை உளவியல் நிபுணர்கள்.

குழந்தைகள் ஏதாவது கேள்வி கேட்டால் அதற்கு அப்பாக்கள் தெரியாது என்பதற்காக கோபப்படக்கூடாது.

அப்பாக்கள் பதில் சொல்ல முடியாத கேள்விகள் உலகத்திலே பல இருக்கி றது. ஒரு சிறுவன் அவனது அப்பாவைப் பார்த்து கேட்டான், அப்பா ஒரு கல்லை கையிலே இருந்து போட்டால் அது ஏன் தரையிலே விழுகிறது என்று.

புவியீர்ப்பு சக்தி தான் அதற்குக் காரணம். அந்த சக்தி தான் கல்லை கீழே இழுக்கிறது என்று சொன்னார் அப்பா.

இந்த சக்தி ஏன் மேலே இழுக்கக் கூடாது? என்னத்திற்கு கீழே இழுக்கிறது என்று கேட்டான்.

அப்பா பார்த்தார் அவசரமாக கொஞ்சம் வேலை இருக்கிறது பின்பு வந்து பதில் சொல்கிறேன் என்று சொல்லி விட்டு நழுவி விட்டார்..

பிள்ளைகளுக்குள்ளே பிரத்தியேகமாக சில சந்தேகங்கள் எல்லாம் வரும். அதை எல்லாம் சமாளிப்பது கஷ்டம் தான். ஒரு வாத்தியார் வகுப்பிலே பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். அப்போது வேடிக்கையாகச் சொன்னார்.

ஏய்... மாணவர்களே இந்த உலகம் ஒரு நாள் அழியப்போகிறது. எரிமலை குமுறப் போகிறது. வானம் இடிந்து விழப்போகிறது. என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டே போனார்.

இதைக் கேட்ட ஒரு பையன் பொறுமையாக எழுந்து அன்று பாடசாலை இருக்கா என்று கேட்டானாம்.

அவன் சந்தேகம் அவனுக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேராவில் குள புனரமைப்பு பணியை துரிதப்படுத்துங்கள்
## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தேராவில் குளத்தில் இருந்து நீரினை வெளியேற்றும் வேலைத் திட்டம் முழுமை பெறாமலே உள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குளத்தில் இருந்து நீரினை வெளியேற்றுவதற்கு ஏ-35 வீதியில் பாலம் அமைக்கப்பட்டு தொடக்க வேலைகள் நிறைவு பெற்ற நிலையில் குளத்து நீரினை ஒன்றரை கிலோமீற்றர் தூரம் வாய்க்கால் அமைத்து நீரினை அகற்றுவதற்கான திட்டம் வரையப்பட்டிருந்த போதிலும் வாய்க்கால் அமைக்கப்படும் பகுதியில் உள்ள மரங்களை அழிப்பது தொடர்பான அனுமதி வனவளத் திணைக்களத்தினால் வழங்கப்படாததன் காரணமாக இவ்வேலைத் திட்டம் முழுமைபெறாமல் உள்ளது.

இதேவேளை இவ் வேலைத் திட்டம் விரைவாக நிறைவு செய்யப்படாது விட்டால் இனிவரும் காலம் மழை காலம் என்பதினால் மீண்டும் தேராவில் குளம் நிரம்பி நீர் வழிந்தோட முடியாமல் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை உருவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே குறித்த வேலைத் திட்டத்தினை விரைவுபடுத்துமாறு மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6-350)

# தமிழ் பொது வேட்பாளருக்கு 50 வீதமான வாக்குகள் கிடைக்கும்
## நம்பிக்கை வெளியிட்டார் சிவசக்தி ஆனந்தன்



(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரான அரியநேந்திரனுக்கு வடக்குக் கிழக்கில் உள்ள 12 லட்சம் வாக்குகளில் 50 வீதமான வாக்குகள் கிடைக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள வாடி வீட்டில் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், வவுனியாவை சேர்ந்த சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


கடந்த 8 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தென்னிலங்கையைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்பதுடன், தமிழ் மக்கள் காட்டிய அந்த நல்லிணக்க செய்தியை ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிகளும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வையேனும் முன்வைக்க வில்லை.

அதனடிப்படையிலே நாங்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலிலே தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு மற்றும் அரசியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டிருப்பதுடன்,

இதில் 50 வீதமான மக்கள் வாக்களிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்ப்பதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6-250)

# ரூ.12 லட்சம் பெறுமதியான பீடி இலை பண்டல்கள் மீட்பு



(மன்னார்)

பாம்பன் அடுத்த அக்காள் மடம் வடக்கு பாக் ஜலசந்தி கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக படகில் பதுக்கி வைத்திருந்த 780 கிலோ பீடி இலை பண்டல்கள், கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் நாட்டுப் படகை பாம்பன் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கைக்கு கடத்த இருப்பதாக பாம்பன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு பொலிஸார் இருவர் அக்காள் மடம் வடக்கு பாக் ஜலசந்தி கடற்கரை ஓரங்களில் சோதனையில் ஈடுபட்ட வேளை குறித்த பீடி இலைகள் மீட்கப்பட்டது.

கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பெயரில் தங்கச்சிமடத்தை சேர்ந்த ஒருவரை பொலிஸார் தீவிரமாக தேடிவருகின்றனர். மேலும் பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகளின் இலங்கை மதிப்பு சுமார் 12 லட்சம் என தெரிய வருகிறது. (நி-6-285)

# பிள்ளைகளின் கல்வியை பாழாக்காதே-மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

மன்னார் வங்காலை புனித ஆனாள் கல்லூரி தேசியப் பாடசாலையின் அதிபரை உடனடியாக மாற்றக் கோரி நேற்று திங்கட்கிழமை காலை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து பாடசாலைக்கு முன் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிள்ளைகளின் கல்வியை பாழாக்காதே, ஒழுக்கம் இல்லாத உன்னால் எப்படி ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க முடியும்?, ஒரு குடும்பத்திற்காக ஊரை அழிப்பதா?, உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் உடனடியாக குறித்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# தேவிபுரம் கிராமத்திற்கு பேருந்து சேவை வேண்டும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் கிராமத்திற்கு பேருந்து சேவை நடத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்கின்றன. இக்கிராமத்தில் இருந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலை என்பன 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளன. இவற்றிற்கு செல்வதற்கு பேருந்துகள் கிராமத்திற்கு வருகை தருவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்தில் இருந்து உயர்தர வகுப்புகளுக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, உடையார்கட்டு மகா வித்தியாலயம் என்பவற்றிற்கு செல்லும் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

ஏ-35 தேவிபுரம் சந்தியில் இருந்து தேவிபுரம் பகுதி வரை பேருந்து சேவை நடத்த வேண்டும் என கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (நி-6-350)



கிளிநொச்சி தெற்கு வலய விஞ்ஞான போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களான ச.யதுசன் 1 ஆம் இடமும், சு.யதுசனா, ச.திபிகன், ச.ரோகித் ஆகியோர் 2 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளனர். (படம்:கிருஷ்ணகுமார்)

# நீதிக்கான பயணம் உறவுகளின் ஓவியங்கள்

(முறிகண்டி)

நீதிக்கான பயணம் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சி.

கிளிநொச்சி டிப்போ சந்தி முன்பாக இடம்பெற்ற கண்காட்சியில் பல்வேறு கருத்துக்களை தாங்கிய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கடந்த கால யுத்தத்தின் போது மனதில் பதிந்த விடயங்களை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கைவண்ணத்தில் உருவான ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (நி-6-100-315-316)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் — பாகம் - 3 — 567





14 ஆம் அத்தியாயம்
பறக்கும் குதிரை

நந்தினி ஒளி வீசிய அந்த வாளை எடுத்து ஆசையுடன் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். பிறகு முகத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டு தன் செவ்விதழ்களினால் முத்தமிட்டாள். ஒரு கணம் அக்கினிக் கொழுந்தைச் செந்தாமரை மலர் முத்தமிடுவது போலிருந்தது. அடுத்த கணத்தில் இரத்த வர்ம மேகம் பூரண சந்திரனைக் குறுக்கே நின்று தடுக்கப் பார்ப்பது போலிருந்தது. நந்தினியின் முகம் அப்போது காபாலிகர்கள் பூசித்த இரத்த பலி கேட்கும் காளியின் கோர சௌந்தரிய முகம் போலாயிற்று. கத்தியை எடுத்து முன்போல் பக்கத்தில் வைத்ததும் அவளுடைய முகம் பழைய வசீகரத்தை அடைந்தது.

"ஆம், தெய்வம் எனக்கு அளித்திருக்கும் சூசகம் இந்த வாள். ஆனால், அந்தச் சூசகத்தின் பொருள் இன்னதென்பதை நான் இன்னும் அறியவில்லை. இந்த வாளை நான் அடிக்கடி கொல்லன் உலைக்கு அனுப்பித் துருநீக்கிப் பதப்படுத்திக் கூராக்கி வைத்துக் கொண்டு வருகிறேன். தாய்ப்புலி தான் பெற்ற குட்டிப் புலியைப் பாதுகாப்பதுபோல் இதை நான் பாதுகாத்து வருகிறேன். உரிய பிராயம் வருவதற்குள் புலிக்குட்டி நீண்ட கொம்புகள் படைத்த காட்டு மாடுகளிடம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது அல்லவா? அராபிய நாட்டார் தங்கள் குதிரையை எவ்வளவு அன்புடன் பேணுகிறார்களோ அப்படி இதை நான் பாதுகாத்து வருகிறேன்.

நோய்ப்பட்ட சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு வானமாதேவி பணிவிடை செய்வது போல் நானும் இந்த வாளுக்குச் செய்து வருகிறேன். இதைக் கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்பதைத் தெய்வம் இன்னும் எனக்கு அறிவிக்கவில்லை. மலர் மாலை தொடுத்துப் பழகிய இந்தக் கைகளினால் இந்த வாளை எந்தக் கொடியவனுடைய விஷ நெஞ்சத்திலாவது செலுத்த வேண்டுமென்பது தெய்வத்தின் ஆக்ஞையோ அல்லது என்னுடைய மார்பில் என்னுடைய கையினாலேயே இதைச் செலுத்திக் குபுகுபுவென்று பெருகும் இரத்தத்தை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்த இந்த உடம்பில் பூசிக்கொண்டு நான் சாகவேண்டும் என்பது தெய்வத்தின் சித்தமோ, இன்னும் அது எனக்குத் தெரியவில்லை. இந்த வாளை எனக்கு அளித்திருக்கும் தெய்வம், சமயம் வரும்போது அதையும் எனக்குத் தெரியப்படுத்தும். அந்தச் சமயம் எப்போது வரும் என்று தெரியாத படியால் இரவும், பகலும் எந்த நேரத்திலும் ஆயத்தமாயிருக்கிறேன்.

ஆம் அழகிற்குப் பெயர் போன பழுவூர் இளைய ராணிக்கு ஆடை ஆபரண, அலங்காரங்களில் மிக்க பிரியம் என்பது நாடறிந்த செய்தி. இரவு பகல் அறுபது நாழிகையும் நான் இந்த என் மேனியை அலங்கரித்து அழகு படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறேன். பாவம்! பெரிய பழுவேட்டரையர் அவருக்காகவும், அவருடைய கௌரவத்தை முன்னிட்டும் நான் இப்படி சதா சர்வகாலமும், சர்வாலங்காரத்துடன் விளங்குவதாக நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்! என் நெஞ்சத்தில் கொழுந்துவிட்டெரியும் தீயை அவர் அறியார்!"

இதையெல்லாம் பிரமை பிடித்தவன் போலக்கேட்டுக் கொண்டிருந்த வல்லவரையன் சுய உணர்ச்சியை வருவித்துக் கொண்டு, "அம்மணி! பெரிய பழுவேட்டரையர் எங்கே!" என்று கேட்டான். "ஏன்? அந்தக் கிழவரைப் பார்ப்பதற்கு உமக்குப் பயமாயிருக்கிறதா?" என்றாள் நந்தினி.

"இல்லை, அம்மணி! தங்களைப் பார்க்கவே நான் பயப்படவில்லையே, பழுவேட்டரையரிடம் எனக்கு என்ன பயம்?" என்றான் வந்தியத்தேவன்.

"ஆகா! உம்மை எனக்குப் பிடித்திருப்பதின் காரணம் அதுதான். எதனாலோ, என்னைக் கண்டு எல்லோரும் பயப்படுகிறார்கள். வீராதி வீரரும் எத்தனையோ போர்க்களங்களில் போரிட்டு உடம்பில் அறுபத்துநாலு புண் சுமந்தவருமான பெரிய பழுவேட்டரையர் என்னைக் கண்டு பயப்படுகிறார்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## பொருளின் அருமை தெரியாதவன்



ஒரு சிற்றூரில் வீரன் என்னும் விறகு வெட்டி ஒருவன் இருந்தான்.

அவன் நாள் தோறும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி, தலையில் சுமந்து வந்து அதை விற்று வாழ்ந்து கொண்டிருந்தான்.

வழக்கம் போல வீரன் காட்டுக்குச் செல்லும் போது, ஏதோ நினைவில் வெகு தொலைவு சென்று விட்டான்.

அப்போது கந்தவர்கள் இருவர் அவன் எதிரே வந்தனர். வீரனைக் கண்டு அவனை விசாரித்தனர். வீரன் தன்னுடைய கடின உழைப்பைக் கூறினான்.

அவனிடம் இரக்கம் கொண்டு, தங்களுக்கு வேலையாளாக இருக்கும்படி கேட்டனர். வீரனும் அதற்குச் சம்மதித்தான்.

கந்தர்வர்கள் காலையில் வெளியே சென்றனர். அவர்களுக்கு உணவு தயாரித்து வைக்க நினைத்தான் வீரன். ஆனால், சட்டிகள், அரிசி, பருப்பு முதலியவை இல்லாததால், திகைத்து நின்றான் வீரன்.

கந்தர்வர்கள் திரும்பி வந்ததும் வீரனின் திகைப்பைப் பார்த்து புன்முறுவலுடன் அங்கே ஓர் மூலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சட்டி ஒன்றைக் காட்டி, இது ஒரு "அமுதசுரபி" என்றனர்.

"அமுத சுரபி" என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது என்று கூறி, திரு திரு என்று விழித்தான் விறகு வெட்டி வீரன்.

"நமக்கு என்ன உணவு வேண்டுமோ, அதை நினைத்து, சட்டியில் கையை விட்டால், சட்டியில் என்ன உணவு வேண்டுமானாலும் நிறையக் கிடைக்கும்" என்றனர் கந்தர்வர்கள்.

வீரன் அவர்கள் கூறியதைக் கேட்டு அதிசயப்பட்டான்.

'அறு சுவை உணவு வேண் டும் என்று நினைத்து சட்டியில் கையை விட்டான்.

சுவையான அறுசுவை உணவு கிடைத்தது. மகிழ்வோடு மூவரும் உண்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களுக்கு எவரும் துரோகம் செய்து விடாதீர்கள்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து தமிழ் மக்கள் உரிமையற்றவர்களாக – அடக்கப்பட்ட இனமாக வாழ்ந்து வருகின்றனர்.

தென்பகுதியில் எப்போதெல்லாம் பேரினவாதம் மதம் கொள்கிறதோ அப்போதெல்லாம் தமிழ் மக்கள் பேரினவாதப் பேய்க்கு இரையாகிப் போவர்.

இந்த நெட்டூரம் காலத்துக்குக் காலம் நடந்தாகும். இத்தகைய கொடுமைகளில் இருந்து தமிழினம் தப்பிப் பிழைக்க வேண்டுமென்றால், தமிழினத்தின் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் என்ற உண்மை உணரப்பட்டது.

அதற்காக நம் பிள்ளைகள் களமாடினர். தமிழினம் வாழ வேண்டும் என்பதற்காக எங்கள் தமிழ் இளைஞர், யுவதிகள் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கினர்.

என்ன செய்வது, உலக வஞ்சகம் எங்கள் இன விடுதலைப் போராட்டத்தை அழித்தது.

ஆம், ஆயுதப் போராட்டத்தை இல்லாதொழிப்பது என்ற பேரால் தமிழின அழிப்பைச் சிங்களப் பேரினவாதம் கனகச்சிதமாக மேற்கொண்டது.

சுருங்கக்கூறின் விடுதலைப் புலிகளை முடக்குவதற்கு உலக நாடுகளிடம் உதவிகளைப் பெற்ற சிங்களப் பேரினவாதம், அதனூடு பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்துத் துவம்சம் செய்தது.

எனினும் தமிழ் மக்கள் கொல்லப்படும் போது, வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு எதனையும் உலக நாடுகள் செய்யவில்லை.

தவிர, இன்றுவரை தமிழ் மக்களாகிய நாம் உரிமையற்றவர்களாகவே வாழ்கின்றோம்.

நிலைமை இதுவாக இருக்கையில், எம் மக்களின் உரிமை – எம் மக்களின் வாழ்வியல் என்ற பேரால் பலர் வெளிக்கிளம்பியுள்ளனர்.

இவர்களில் சிலர் உண்மையான தமிழின விசுவாசத்தோடு பாடுபடுகின்றனர். ஆனால் பலர் வேசம் போட்டுள்ளனர்.

இங்குதான் உண்மையானவர்கள் யார்? வேடதாரிகள் எவர் என்பதை பிரித்தறிய முடியாமல், தமிழ் மக்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

ஆகையால் நாம் அனைவரிடமும் கேட்பது அன்புக்குரியவர்களே! எங்கள் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல.

ஆம், காணாமல்போன தங்கள் பிள்ளைகளை நினைந்து இன்னமும் கண்ணீரோடு உறங்கி கண்ணீரோடு விழிக்கின்ற நம் பெற்றோர்களின் அவலத்தை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

யுத்தத்தில் தம் பெற்றோரைப் பறிகொடுத்துவிட்டு, அநாதைகளாக இருக்கக்கூடிய பிள்ளைகளின் நிலைமையை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

எனவே எவரும் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துவிடாதீர்கள். அவ்வாறு இழைத்தால் அது மிகக் கொடும் பாவச் செயலாகும்.

# நீதிபதிகளை விமர்சிப்பது நீதித்துறையின் சுயாதீனத்தினை பாதிக்கும் – கர்தினால்

நீதிமன்றம் சுயாதீனமாக இயங்க அரசு வழிவகை செய்ய வேண்டும் எனவும் நீதிபதிகள் அரசாங்கத்துக்கு எதிரான தீர்ப்புகளை வழங்குவதற்காக அவர்களினை அரசாங்கம் விமர்சிக்க கூடாது எனவும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை அரசாங்கத்திற்கு எடுத்துரைத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நீதித்துறையின் பூரண சுதந்திரம் அரசியலமைப்பின் மூலக்கல்லாகும் என அது அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

எனவே, நீதித்துறையின் சுதந்திரத்தை மதித்து நிலைநிறுத்துவது அனைத்து அரச நிறுவனங்களின் கடமையாகும். அது எந்த விதமான தலையீடு அல்லது தேவையற்ற செல் வாக்கின்றி இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மக்களின் பாதுகாப்பின் கடைசி கோட்டையைத் தாக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட அனைவரையும் திருச்சபை கேட்டுக்கொள்கிறது என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தினார்.

தங்களுக்கு பாதகமான சில தீர்ப்புகளை வழங்கிய நீதிபதிகளை விமர்சித்து அரசாங்கத்தின் சமீபத்திய அறிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அவரது கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

நாட்டில் வறுமையை ஒழிக்க

# பெண்களுக்கு முன்னுரிமை ரூ. 20 ஆயிரம் வழங்கவும் திட்டம்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு மாதாந்தம் 20,000 ரூபாய் வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கான திட்டமொன்றை அமுல்ப்படுத்தவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சேருவில நகரில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் 16ஆவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டை வங்குரோத்துக்கு உள்ளாக்கிய, தற்போதைய அரசாங்கத்தின் விவேகமற்ற கொள்கைகளால் இலட்சக்கணக் கானோர் வறுமைக்கு உள்ளாகியுள்ளனர்.

தெளிவான வருமான வழிகள் இன்றி, மூன்று வேளை உணவையேனும் பெற்றுக் கொள்ள முடியாத வறிய மக்கள் நாட்டில் உள்ளனர்.

அவர்களுக்காக ஜனசவிய, சமுர்த்தி, அஸ்வெசும, மற்றும் கெமிதிரிய ஆகிய வேலைத் திட்டங்களில் உள்ள சிறந்த விடயங்களை ஒன்றாகச் சேர்த்து, அவற்றின் குறைபாடுகளை நீக்கி, புதிய வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்போம்.

வறுமை ஒழிப்பு திட்டத்தின் ஊடாக மாதாந்தம் 20,000 ரூபாய் வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

# கத்தியால் வெட்டி கொலை முயற்சி

## கைதானவர்கள் தொடர்ந்து மறியலில்

(நெல்லியடி)

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளரை கத்தியால் வெட்டி கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை நேற்று (26) உத்தரவிட்டார்.

கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 11.00 மணியளவில் கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்குரிய நெல்லியடி நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர் மீது மோட்டார் சைக்கிளில் வந்திருந்த இருவரில் ஒருவர் கத்தியினால் கொடூரமாக வெட்டி படுகாயப்படுத்தப்பட்டிருந்தார். அங்கிருந்த சி.சி.டி.வி கமராவின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டு வந்த நெல்லியடிப் பொலிஸார் துன்னாலைப் பகுதியை சேர்ந்த இருவரை கைது செய்து அவர்களுக்கு எதிராக கொலை முயற்சியில் ஈடுபட்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு நேற்று திங்கட்கிழமை (26) மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7,60)

# மனுஷ, ஹரினுக்கு எதிராக அதிகரிக்கும் முறைப்பாடுகள்

## தேர்தல்கள் ஆணைக்குழு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரின் பெர்ணாண்டோ மற்றும் மனுஷ நாணயக்காரவை ஜனாதிபதி தனது ஆலோசகர்களாக நியமித்துள்ளமை குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

ஜனாதிபதியின் ஆலோசகர்கள் என்ற அடிப்படையில் தங்களிற்குக் கிடைத்த வரப்பிரசாதங்களை அவர்கள் தேர்தல் செயற்பாடுகளிற்காக பயன்படுத்துகின்றனரா என உன்னிப்பாகத் தேர்தல் ஆணைக்குழு அவதானித்து வருகின்றது.

ஜனாதிபதியின் நியமனம் குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனினும் வேட்பாளர் என்ற போதிலும் ஜனாதிபதிக்கு நியமனங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் உள்ளது.

எனினும் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் ஒரு வேட்பாளருக்கு ஆதரவாக செயற்படுவதற்காக வாகனங்கள் போன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தினால் அது தேர்தல் சட்டங்களை மீறும்செயலாகும்.

இதன் காரணமாக அவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# தேர்தல் பிரசாரங்களை தவிர்க்கும் வேட்பாளர்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களில் 19 வேட்பாளர்கள் இதுவரை எவ்வித பிரசார நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவில்லை என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி குறித்த வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஒரு கூட்டத்தைக்கூட நடத்தவில்லை.

எனினும், ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டு அச்சடித்தல் உள்ளிட்ட தேவைகளுக்கான தேர்தல்கள் ஆணைக்குழு சுமார் ஒரு கோடி அல்லது ஒன்றரைக் கோடி ரூபாவை செலவிடவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசாரம் செய்யாமை சிக்கலான நிலை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களில் சுவரொட்டிகள் மற்றும் பாரிய கட்அவுட்கள் பயன்படுத்துவது குறைந்துள்ளமை மிகவும் நல்ல விடயம் எனவும் மேலும், தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

(இ) 13ஆம் திருத்தத்தில் உள்ள 3ஆம் பட்டியலில் ( ஒத்தியங்கு பட்டியல்) குறிப்பிடப்படும் விடயங்களை திட்டவட்டமாகப் பகிர்தல் அல்லது முழுமையாக அகற்றுதல். என்பனவாகும்.

முதற் தடவையாக இரு பிரதான கட்சிகளும் இணைந்து ஒரு முடிவொன்றுக்கு வர முடிந்தது. இரு பிரதான கட்சிகளும் இணங்கியபோதும் அப்போதைய தமிழ் அரசியல் கட்சி இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

மாங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து முன்வைத்த யோசனைகளுக்கு அன்று தமிழ்க் கட்சிகள் இணங்கியிருந்தால் நாடு புதியதொரு வரலாற்றில் பயணித்திருக்கும் என 2018 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

### 1994 ஜனாதிபதித் தேர்தலுக்காக திரு. காமினி திசாநாயக்க முன்வைத்த யோசனைகள் அதிகாரத்தை ஒப்படைத்தல்

1. மக்களின் சட்டவாக்கத்துறை அதிகாரம் செனட் சபை மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபை மூலம்

2. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை மூலமும் மாகாண சபைகளின் முதலமைச்சர் மூலமும் நடைமுறைப்படுத்தப்படும்.

3. மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் பொறுப்புக் கூறும் இரண்டு அரச சேவைகள்

மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையே திட்டவட்டமான அதிகாரப் பகிர்வு. விடயப் பொறுப்புக்கள் திட்டவட்டமான அதிகாரப் பகிர்வு. விடயப் பொறுப்புக்கள் திட்டவட்டமான அதிகாரப் பகிர்வு. விடயப் பொறுப்புக்கள் பற்றிய இரண்டு நிரல்கள்.

- மாகாண சபைகள் பற்றி மத்திய அரசு செயற்பட முடியாது.

- மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள் மேற்படி மாகாண சபைகளின் அங்கீகாரமின்றி மீளப்பெறவோ குறைக்கவோ முடியாது.

- மாகாண பொலிஸ் சேவை ஒன்று உருவாக்கப்படும்.

- சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் அரசகரும மொழிகளாகும்.

### அரசியலமைப்பு முன்மொழிவுகள் - 1995

பொதுஜன ஐக்கிய முன்னணி 1995இல் அதிகாரங்களின் பரவலாக்கம் சம்பந்தமாக அதன் வரைவு அரசியலமைப்பை முன்வைத்தது. இது பெரும்பாலும் காமினி திசாநாயக்க முன்மொழிவுகளை ஒத்ததாக இருந்தாலும் நிதி பரவலாக்கம் மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் அதிகமாக இருந்தன ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இதனை எதிர்த்தது.

### பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் யோசனைகள் -1997

இலங்கையில் வாழும் அனைத்து மக்கட் பிரிவினருக்கும் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் வழங்குதல்.

- அனைவரையும் சமமாக மதிக்கும் ஓர் சித்தாந்தத்தை விரிவாக்கம் செய்தல்

- அதிகாரத்தைப் பகிரும் ஓர் கட்டமைப்பை உருவாக்குதல்

- அனைத்து மாகாணங்களுக்கும் ஒவ்வொரு மாகாண சபையை நிறுவுதல்.

- வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு தனி மாகாணமாகக் கருதப்படும்.

- மாகாணசபையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும்.

- அதிகாரத்தைப் பகிர்வதற்கான ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படும்.

- அரச யாப்பிற்கமைய இலங்கைக் குடியரசு ஐக்கிய இறைமையுடைய ஓர் குடியரசாகும். அது மாகாணங்களின் ஒன்றியமாகக் கருதப்படும்.

- அதிகாரப்பகிர்வு இரு நிரல்களில் உள்ளடங்கும் மத்திய அரசாங்கத்தின் நிரல் ஒன்றும் மாகாண அரசாங்கத்தின் நிரல் ஒன்றும் என இரு நிரல்கள் மாத்திரமே அமுலில் இருக்கும்.

### சந்திரிக்காவின் அரசியலமைப்பு வரைவு - 2000

2000 அரசியலமைப்பு வரைவு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது முக்கியமாக அப்போது பரவலாக மதிக்கப்பட்ட அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் தமிழ் புத்திஜீவி நீலன் திருச்செல்வம் ஆகியோரால் வரையப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஏனைய கட்சிகளும் இந்த அரசியலமைப்பு வரைவு பாராளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது 95 சதவீத விதிகளுக்கு இணங்கியிருந்தன.

முக்கியமாக அதிகாரப் பகிர்வுப் பொதியின் ஊடாக இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வை இந்த வரைவு கொண்டிருந்தது. நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நடைமுறையும் கூறப்பட்டிருந்தது. அவ்வரைவில் ஜனாதிபதி குமாரதுங்க மூன்றாவது தடவையாக நிறைவேற்று அதிகாரியாக பதவியேற்க முடியும் என்ற பகுதியை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்த்தது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினரால் பெரும் சலசலப்பு உருவாக்கப்பட்டு, கடைசியில் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு வரைவின் பிரதிகளை எரிக்கப்பட்டதோடு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறாததால் அது நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையிலே பண்டா செல்வா ஒப்பந்தம் தொடக்கம் தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் வரை அதிகாரப்பரவலாக்கல் மூலமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய முயற்சிகளுக்கென்று கசப்பான ஒரு நீண்ட வரலாறே இருக்கிறது.

ஆனால், இந்தியாவின் தலையீட்டையடுத்து சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொண்டுவரப்பட்ட மாகாணசபைகள் முறை மாத்திரமே அரைகுறையாகவேனும் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஒன்றாக இருந்து வருகிறது. இந்தியாவின் நெருக்குதல் இல்லாவிட்டால் இது சாத்தியமாகியிருக்காது. இந்தியாவின் நெருக்குதலுக்குப் பணிந்தே ஜெயவர்தன உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

தற்போது மாகாணசபைகளுக்குச் சட்டரீதியாக இருக்கின்ற அதிகாரங்களைக்கூட நடைமுறைப்படுத்த அனுமதிக்காத சிங்கள அரசியல் சமுதாயத்தை 13 ஆவது திருத்தத்தில் உள்ளதை விடவும் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டதான ஏற்பாடுகளை புதிய தொரு அரசியலமைப்பில் உள்ளடக்குவதற்கு இணங்கவைக்க முடியுமா என்ற கேள்வி இயல்பாகவே தோன்றும்.

மாகாணசபைகள் முறையை இனப்பிரச்சினைக்கான தீர்வாகத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தமிழர்கள் கூறிவருகின்ற போதிலும் அதில் பங்கேற்காமல் இருக்கவும் அவர்களால் முடியவில்லை. இதுவே உண்மை எனவே 13ஆவது திருத்தத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலமாக தீர்வொன்றை நோக்கி பயனுறுதியுடைய முறையில் நகர முயற்சிப்பதே நல்லதாயிருக்கும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யானை தாக்கி...

போகஸ்வெவப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை போகஸ்வெவப் பகுதிக்குட்பட்ட சலனிகம கிராம வயற்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் போகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## குடும்பஸ்தர்...

டுள்ளதாகக் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு சுவிஸ் நாட்டில் இருந்து விடுமுறையில் வருகை தந்த ஒருவர் தங்கியிருந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த வீட்டில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த நபரும், அவரது உறவினரும் மதுவருந்திய நிலையில் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது சுவிஸில் இருந்து வருகை தந்தவரின் தலையில் மற்றைய நபர் இரும்புக் கம்பியால் தாக்கியதில் அவர் அவ் இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

செல்லத்துரை விமலநாதன்(வயது-66) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய சம்பவ இடத்திற்கு சென்ற கனகராயன்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் 60 வயது குடும்பஸ்தர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-7,256)

## நாய்க்கடிக்கிலக்...

பெறாமல் தவிர்த்துள்ளார்.

சில வாரங்களுக்குப் பின்னர் மூதாட்டிக்குத் தோல் வருத்தம் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி மூதாட்டி நேற்று உயிரிழந்தார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ந-7,33)

## கார் - சைக்கிள்...

உள்ளான நபரொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அரசடி வீதி, இருபாலை கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் (வயது - 69) என்ற வயோதிபராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வரும் அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.50 மணியளவில் துவிச்சக்கரவண்டியில் யாழ்ப்பாணத்தில் இருந்து இருபாலை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இருபாலைப் பகுதியில் வீதியைக் கடப்பதற்காக மத்திய கோட்டுப் பகுதியில் நின்றிருந்தபோது பின்னால் வேகமாக வந்த கார் அவரை மோதித்தள்ளியது.

இதில் படுகாயங்களுக்குள்ளானவர் காலை 8. 15 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வட மாகாண...

மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பிறவுண் வீதி வழியாக நாவலர் வீதிக்கு சென்று கொண்டிருந்தபோது எதிர்த் திசையில் வந்த முச்சக்கரவண்டி அவர் மீது மோதித் தள்ளியது.

இதில் அவரின் மகன் தூக்கி எறியப்பட்டிருந்த நிலையில் மேற்படி நபர் முச்சக்கரவண்டிக்கு கீழ்ப்பகுதியில் அகப்பட்டுக் கொண்டார்.

இதனையடுத்து முச்சக்கரவண்டியில் சென்ற நால்வர் அவரை மீட்பதற்காக முச்சக்கரவண்டியைத் தூக்கிய போது தவறி மீண்டும் அவர் மீது முச்சக்கர வண்டி விழுந்துள்ளது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளானவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

வலம்புரிப் பத்திரிகையின் செய்தியாளராக நீண்ட நாட்கள் ஐங்கரன் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

## படுகொலைகள்...

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்து மக்களினதும் சுதந்திரத்தையும் உறுதிசெய்வோம் எனத் தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத் தினை முறைமைப்படுத்தப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான தேசிய மொழிக்கொள்கையொன்று உருவாக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது. (ம-7)

## இலங்...

மான கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.

இந்நிலையில் நேற்று இந்தியாவின் பிரம்மாண்ட போர்க்கப்பலான ஐ.எம் மும்பை கொழும்பை வந்தடைந்திருந்தது.

இதேவேளை சீனக் கடற்படைக்குச் சொந்தமான 3 போர்க்கப்பல்களும் நேற்று இலங்கையை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கட்சி தாவினால் கடும் நடவடிக்கை நாமல் எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் வரப்பிரசாதம் மற்றும் தனிப்பட்ட இலாபம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு தவளை போல் கட்சியை விட்டு பாய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், கட்சித் தாவல்களில் ஈடுபடுபவர்களுக்கு உயர்நீதிமன்றம் அண்மைக் காலமாக வழங்கிய தீர்ப்புக்களை வரவேற்கிறேன் எனவும் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 5577
D 2 2 8 8 0 6
அத சம்பத D 8 8 0 6
சீட்டிழுப்பு இலக்கம் 152
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1607
P 14 61 78 80 P
Double Chance 12581

மெகா பவர்
திகதி 26/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1925
R 02 12 17 32 72
Double Chance 97793

லக்கி 7 VIP
திகதி 2024.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 0403
K 1 6 2 1 4 8 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3819
சீட்டிழுப்பு திகதி 26.08.2024
N 11 19 49 71
N 73042

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 0886
கும்பம் 12 22 25 44 கும்பம்
47782 20

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.08.2024 வெற்றி வாரம் 285 வர்ணம் ஊதா
8 8 1 6 2 0 1
42060
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,801,684.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2551 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 26.08.2024 தினம் திங்கள்
22 56 73 76 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,093,880.00
DLB

சனிதா
திகதி 2024.08.26 வெற்றி வாரம் 4712
16 59 61 74 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
53041
DLB


ராசி
சீட்டிழுப்பு வாரம் 4263 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.26 தினம் திங்கட்கிழமை
09 12 47 48 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,050,281.20
147919
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 16 09 52 65 67
1727 பச்சை 26.08.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 541,205,572.60
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.08.26 வெற்றி வாரம் 2054 வர்ணம் செம்மஞ்சள்
03 16 35 59 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,025,593.60
DLB

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2377
சீட்டிழுப்பு திகதி 2024.08.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,782,876.80
23 27 33 39 J
150281
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவந்தனில் கார்த்திகை உற்சவம் நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது. படங்கள் : சிவசாந்தன்

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாடு

## சஜித் தெரிவிப்பு

யுத்தத்தின் பின்னர் வடகிழக்கு பிரதேசம் இன்னும் சரியான அபிவிருத்தியை நோக்கி செல்லவில்லை. வடகிழக்கு பிரதேசத்தை விருத்தியாக்கும் நோக்கில் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தி, வடகிழக்கு பகுதியை மேம்படுத்துவதோடு, முழு நாட்டையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில், மந்த போசனை நிலைமை அதிகரித்து காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. தேசிய போசாக்கு கொள்கையை நாட்டிற்குள் நடைமுறைப்படுத்தி, அவற்றிற்குத் தீர்வு காணுவோம். மந்த போசனையே இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தி அதனூடாக ஏற்படுகின்ற அபிவிருத்தியின் பிரதிபலனை மக்களுக்கு கிடைக்கச் செய்வதோடு, அதற்கு மேலதிகமாக கடன் மாபியா காரணமாக மக்களும் கடன் சுமைக்குள் சிக்கி இருக்கின்றார்கள். சூறையாடும் ஒன்லைன் கடன் மாபியாவில் இருந்து மக்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# நோயாளர் காவுவண்டியிலிருந்து குதித்த பெண் மருத்துவர் காயம்

பெண் வைத்தியர் ஒருவர் நோயாளர் காவுவண்டியிலிருந்து குதித்த நிலையில் அங்கு கூடியவர்கள் சாரதி மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன் இருவரும் நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வைத்தியசாலையில் இருந்து பம்பைமடுப் பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியில் சாப்பாடு கொண்டு சென்றுள்ளனர். குறித்த சாப்பாட்டை வழங்கிவிட்டு நோயாளர் காவு வண்டி வவுனியா நோக்கி வந்த போது வீதியில் நின்ற பெண் வைத்தியர் ஒருவர் குறித்த நோயாளர் காவு வண்டியை மறித்து ஏறியுள்ளார்.

குறித்த ஆயுள்வேத பெண் வைத்தியரை ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கி சென்ற நோயாளர் காவு வண்டி வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பி விட்டு, மீண்டும் மன்னார் வீதி ஊடாக பம்பைமடு நோக்கி புறப்பட்ட நிலையில் நோயாளர் காவு வண்டியில் இருந்த பெண் வைத்தியர் நோயாள்ர் காவு வண்டி கதவை திறந்து கீழே குதித்துள்ளார்.

இதனால் குறித்த பெண் வைத்தியர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு கூடிய மக்களிடம் தன்னை கடத்திச் செல்ல முற்பட்டதாக பெண் வைத்தியர் தெரிவித்ததையடுத்து நோயாளர் காவு வண்டியை மறித்து அதன் சாரதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நெளுக்குளம் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதேவேளை, குறித்த சாரதி தனது வீட்டிற்கு செல்ல வாகனத்தை திருப்பிய போதே குறித்த சகோதர மொழி பெண் வைத்தியர் அச்சம் காரணமாக குதித்ததாக வைத்தியசாலை தரப்பால் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

# மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல் வாரியப்பொல காவல்துறை பிரிவுக்கு உட்பட்ட பாதெனிய - அநுராதபுரம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை அநுராதபுரத்திலிருந்து பாதெனிய நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்த நிலையில் வாரியப்பொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், உயிரிழந்தவரது சடலம் குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

# அறிக்கையை...

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் முழுமையான அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், வெளியான குறித்த அறிக்கையில்

மனித உரிமைகள் பாதுகாப்பு முறையை சீர்திருத்துவதாக உறுதியளித்த போதிலும் இலங்கை அரசாங்கம் அதனை இன்னும் செய்யாமல் இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2023 முதல் அறிமு கப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் மசோதாக்கள் மூலம் பாதுகாப்புப் படைகளுக்கு பரந்த அதிகாரங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் உயர்ஸ்தானிகளிடம் இலங்கை அரசின் நிலைப்பாட்டினை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி எடுத்துரைத்துள்ளார்.

இதன்போது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் கருத்துக்களினை முற்றாக மறுத்துள்ளதோடு குறித்த அறிக்கையில் சுட்டப்பட்ட விடயங்களுக்கான பதில் அறிக்கை வெளிவிகார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்றார்.

மேலும் சமூக மற்றும் அரசியல் முன்னணியில் ஜனநாயக ரீதியாக சவால்களை வெற்றிகொள்வதில் மட்டுமன்றி, அண்மைய வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும் இலங்கை வெற்றியடைந்துள்ளது என்றார். (ம-7)


**வேலையாள் தேவை**

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு 45 வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.

077 073 5931 (C-1058)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 172 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna கல்லூரி 1 Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி 500m தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

077 294 1521
077 288 0152
076 755 8606 (1793)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1056) 076 825 7716 (ஆகாஸ்)

**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: 074 17 37 684 (289)

**இந்தியன் விசா சேவைகள்**

ஒரு வருட E-Visa இப்போது 9990/= ரூபாவிலிருந்து

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (288)

**மொத்தக் கொள்வனவு**

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்

வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்கு பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

ஹப்பி சூப்பர்மாக்கட் உரும்பிராய்

077 773

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள். (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College 49A, Chapel Street, Jaffna.

(C-1055)

College Of International Migration Skills

0777 068 777 / 077 7719 322

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

: கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1055)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org